## சோளிங்கர் நகரம்

**அமைப்பாளர் :** க.சரத்பாபு, 11/9, அன்னதான சத்திரம் ரோடு, கொண்டப்பாளையம், சோளிங்கர், இராணிப்பேட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கி.சுந்தர்ராஜன், 49, பெரிய தெரு, பில்லாஞ்சி இராணிப்பேட்டை. (2) உ.விக்னேஷ், 55/12, ஏ.எம். நகர், கிழக்கு பஜார் தெரு, இராணிப்பேட்டை. (3) சோ.சதீஷ்குமார், 38, வெள்ளாத்தூரன் முதலியார் தெரு, சோளிங்கர், இராணிப்பேட்டை. (4) ச.பார்த்திபன், 6, பஸ் நிலையம் பின்புறம், சோளிங்கர், இராணிப்பேட்டை. (5) க.சூர்யா, 70, போதிபேட்டை தெரு, சோளிங்கர், இராணிப்பேட்டை.

## ஆற்காடு நகரம்

**அமைப்பாளர் :** சே.செல்வம், 30/86, புதுத்தெரு, ஆற்காடு, இராணிப்பேட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** . (1) ந.நித்தியானந்தம், 8–பி, அமீன் பிரபாகரன் தர்கா தெரு, ஆற்காடு, இராணிப்பேட்டை. (2) சௌ.சதீஷ்குமார், 15/7, கோட்டைமேட்டுத் தெரு, கஸ்பா, ஆற்காடு, இராணிப்பேட்டை. (3) கி.கிஷோர்குமார், 11/5, இராதாகிருஷ்ணன் தெரு, ஆற்காடு, இராணிப்பேட்டை (4) செ.குகன், 52/71, தர்மராஜா கோயில் தெரு, ஆற்காடு, இராணிப்பேட்டை. (5) ஹ.அஜீஸ், 29/42, சந்தாப்பேட்டைத் தெரு, ஆற்காடு. (6) க.தட்சணாமூர்த்தி, 8–ஏ, தர்மலிங்கம் தெரு, ஆற்காடு, இராணிப்பேட்டை.

## திமிரி பேரூர்

**அமைப்பாளர் :** சு.மணிகண்டமூர்த்தி, 1/6, லப்பைத் தெரு, திமிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சே.ஜலகண்டன், 24/23, கங்கையம்மன் பேட்டை, 2–வது தெரு, திமிரி. (2) ஜோ.அஜய் குமார், 21/13, நடுத்தெரு, சஞ்சிவீராயன்பேட்டை, திமிரி. (3) ச.தம்பிராஜ், 24, குசேலர் தெரு, திமிரி.

## கலவை பேரூர்

**அமைப்பாளர் :** ச.சடையாண்டி (எ) விஸ்வா, 1, இராஜகோபால் தெரு, கலவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மா.முஜ்மில், 123, திமிரி ரோடு, கலவை. (2)அ.தங்கராஜ், 311, அப்பாதுரை பேட்டைத் தெரு, கலவை. (3) ர.பெருமாள், 12, லப்பைத் தெரு, கலவை. (4) எம்.திலீப்குமார், வேதமுத்துத் தெரு, கலவை.

## விளாப்பாக்கம் பேரூர்

**அமைப்பாளர் :** ம.சதீஸ்குமார், 4/308, லட்சுமிபுரம் முதல் தெரு, விளாப்பாக்கம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ச.சுரேன், 35/22, பெருமாள் கோயில் தெரு, விளாப்பாக்கம். (2) ச.ஐயப்பன், 30/19–ஏ, முருகேச முதலியார் தெரு, விளாப்பாக்கம். (3) நெ.கலைச்செல்வன், 20, புதிய காலனி, விளாப்பாக்கம். (4) அ.சாமிநாதன், 10, ஐயங்குளம் தெரு, விளாப்பாக்கம்.

## அம்மூர் பேரூர்

**அமைப்பாளர் :** ரா.பிரபு, 11, அரசமரத்தெரு, அம்மூர், வாலாஜா, இராணிப்பேட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.பார்த்திபன், 10, பிள்ளையார் கோயில் தெரு, அம்மூர், வாலாஜா. (2) ச.மணிகண்டன், 48, ஆசாகுளக்கரை, அம்மூர், வாலாஜா. (3) அ.பரணி, 8/44, தெற்கு சைதாப்பேட்டை, அம்மூர், வாலாஜா. (4) கோ.நேதாஜி, 2/37, அரசமரத் தெரு, அம்மூர்.

## பனப்பாக்கம் பேரூர்

**அமைப்பாளர் :** மா.சாரதி, 52/22–பி, அம்மநாயக்கர் கோயில் தெரு, பனப்பாக்கம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) பா.பெருமாள், 21/76, அண்ணா நகர், 3–வது தெரு, பனப்பாக்கம். (2) நீ.ஸ்ரீதர், 12/22, புதிய தெரு, அருந்ததியர்பாளையம், பனப்பாக்கம். (3) பி.பரணி, 13–ஏ, பஜனை கோயில் தெரு, தென்மாம்பாக்கம், பனப்பாக்கம்.

## நெமிலி பேரூர்

**அமைப்பாளர் :** ச.பாலசுப்பிரமணியன், 4/8, பொன்னியம்மன் கோயில் குறுக்குத் தெரு, நெமிலி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஏ.தமிழரசன், 1/1, அரக்கோணம் சாலைத் தெரு, கறியாக்குடல், நெமிலி (அ). (2) ம.லோகேஷ், 8, காமராஜர் தெரு, நெமிலி. (3) ர.அருண்குமார், 62, ஒத்தவாடைத் தெரு, காரியாக்குடி, நெமிலி. (4) தி.முகேஷ், 7/2, குட்டைக் காலனி, கறியாக்குடல், நெமிலி (அ).

## காவேரிப்பாக்கம் பேரூர்

**அமைப்பாளர் :** ரு.நிஜந்தன், 3, குள்ள ராமசாமித் தெரு, காவேரிப்பாக்கம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இரா.ஆனந்தன், 21, முனுகூரான் தெரு, காவேரிப்பாக்கம். (2) வெ.பிரகாஷ், 31/34, அருணாச்சல நாயக்கர் தெரு, காவேரிப்பாக்கம். (3) பாலாஜி, 18, கொண்டாபுரம் காலனி, காவேரிப்பாக்கம். (4) பா.சத்யா, 17, செல்வவிநாயகர் கோயில் தெரு, காவேரிப்பாக்கம். (5) வ.விஜய், 44, கவரைத் தெரு, காவேரிப்பாக்கம்.

## தக்கோலம் பேரூர்

**அமைப்பாளர் :** ரா.தண்டபாணி, 31/13, மேட்டுத் தெரு, தக்கோலம், இராணிப்பேட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சே.தணிகைவேல், 48, பெரிய தெரு, தக்கோலம், இராணிப்பேட்டை. (2) ஷ.அமானுல்லா, 15, மீனாட்சி அம்மன் கோயில் தெரு, தக்கோலம், இராணிப்பேட்டை. (3) திலீப், 28/60, மந்தைவெளிக் காலனி, காந்தி நகர், தக்கோலம், இராணிப்பேட்டை.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 22–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

### பரந்தூரில் – சென்னையின் இரண்டாவது விமான நிலையம்! 10 ஆண்டுகளுக்கும் மேலாகவே ஆய்வு செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட திட்டம்!

# தொழில், மருத்துவம், சுற்றுலா ; பெரிய அளவில் வளர்ச்சி பெறும்!

## மக்கள் பாதிக்கப்படாமல் தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

**சென்னை, ஜன. 22–**

**சென்னை மாநகரின் இரண்டாவது பெரிய விமான நிலையம் பரந்தூரில் அமைக்கப்படுவது குறித்து தமிழ்நாடு அரசு மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. மக்களின் வாழ்வாதாரமும், நலன்களும் எந்தவகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கும் பொருளாதார மேம்பாடுகளுக்கும் உறுதுணையாக அமையும் என்பதால் இத்திட்டத்தை செயல்படுத்த முனைந்துள்ளது.**

இந்திய விமான ஆணையம் மேற்கொண்ட சாத்தியக்கூறு ஆய்வின் கண்டுபிடிப்புகள் மற்றும் TIDCO மேற்கொண்ட மேலும் விரிவான பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில், பின்வரும் காரணங்களுக்காக கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கு பண்ணூரை விட பரந்தூர் தளம் மிகவும் பொருத்தமான தளமாக உருவெடுத்துள்ளது:

பரந்தூரில் உள்ள திட்டத் தளம், வரவிருக்கும் சென்னை-பெங்களூரு விரைவுச் சாலைக்கு அருகில் உள்ளது, இது மேலே விவரிக்கப்பட்டுள்ள மற்ற சாலை மற்றும் இரயில் இணைப்பைத் தவிர, தேவையான இடங்களுக்கு எளிதாகவும், குறைந்த செலவிலும் சென்றுவரத்தக்க இடமாக அமைந்துள்ளது.

பண்ணூரில் 1,546 குடும்பங்கள் வசிக்கின்ற நிலையில், பரந்தூரில் அதைவிட 500 குடும்பங்கள் குறைவாக 1,005 குடும்பங்கள் மட்டுமே வசிக்கின்றன. பண்ணூருடன் ஒப்பிடும் போது, விமானச் செயல்பாடுகளுக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட தடைகள் குறைவாகவே உள்ளன, அங்கு பல EHT கோடுகள் தளத்திலும் அதைச் சுற்றியும் உள்ளன மற்றும் தளத்திற்கு அருகில் செயல்படும் தொழில்கள் பல உள்ளன.

விமான நிலையத்தின் செயல்பாடு மற்றும் பிற தேவைகளுக்காக பரந்தூரில் உள்ள உத்தேச தளத்தில் போதுமான கட்டமைப்புகள் இல்லாத நிலம் உள்ளது. பண்ணூர் அருகே உள்ள நிலங்கள் குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுடன் வளர்ச்சியடைந்துள்ளதால், அங்கு விமான நிலையப் பணிகளுக்காக கூடுதல் நிலங்களைக் கையகப்படுத்துவது கடினம்.

பரந்தூரில் அமையும் விமான நிலையத்தைச் சுற்றி எதிர்கால மேம்பாடுகளுக்கு அதிக அளவில் காலி நிலங்கள் இருப்பதால் சிறப்பாகத் திட்டமிட முடியும், அதேசமயம் பண்ணூரில் முன்மொழியப்பட்ட திட்டப் பகுதி திருப்பெரும்புதூர் தொழிற்பேட்டைக்கு அருகில் உள்ளது. மேலும் நிரந்தர தொழில்துறை மற்றும் குடியிருப்புக் கட்டமைப்புகளுடன் வளர்ச்சியடைந்துள்ளது.

பண்ணூருடன் ஒப்பிடும் போது, பரந்தூரில் நிலம் கையகப்படுத்துவதற்கான செலவு குறையும். தொழில்துறை மற்றும் பிற வளர்ச்சிகளால் சூழப்பட்ட பண்ணூரில் உள்ள திட்டத் தளத்துடன் ஒப்பிடும் போது, பரந்தூரில் உள்ள திட்ட தளம் ஒப்பீட்டளவில் வளர்ச்சியடையாமல் உள்ளது. பண்ணூரில் முன்மொழியப்பட்ட திட்டப் பகுதியின் வளர்ச்சியடைந்த தன்மை கையகப்படுத்துதல் செலவில் கணிசமான அதிகரிப்புக்கு வழிவகுக்கும்.

இந்த, அரசு பொறுப்பேற்றதற்கு முன்பாகவே, அதாவது 2020-ஆம் ஆண்டிலேயே முந்தைய ஆட்சியினால் பரந்தூர் விமான நிலைய இடம் தேர்வு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பரந்தூர் விமான நிலையத்தின் மூலம் தொழில் வளர்ச்சி முதலான பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்படும் வாய்ப்புகள் அமைந்துள்ளன.

இந்த அடிப்படையில்தான், விமானப் போக்குவரத்து ஆணையத்தினால் சென்னை மாநகரின் இரண்டாவது விமான நிலையத்தை அமைத்திட பரந்தூர் பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஒரு புதிய விமான நிலையத்தை உருவாக்குவது என்பது அந்தப் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். இந்தியாவின் மற்ற பெரிய நகரங்களான டெல்லி, கொல்கத்தா, ஐதராபாத், பெங்களூரு ஆகிய விமான நிலையங்களுடன் ஒப்பிடும்போது சென்னை விமான நிலையம் மிகச் சிறியதாகும். டெல்லி விமான நிலையம் ஏறத்தாழ 5,106 ஏக்கரிலும், மும்பை விமான நிலையம் 1,150 ஏக்கரிலும், ஐதராபாத் விமான நிலையம் 5,500 ஏக்கரிலும் , பெங்களூரு விமான நிலையம் 4,000 ஏக்கரிலும் அமைந்துள்ளன.

ஆனால் தற்போதைய சென்னை விமான நிலையம் 1,000 ஏக்கரில்தான் அமைந்துள்ளது. அளவில் சிறியதாக இருந்தாலும் ஆண்டிற்கு 2 கோடி மக்கள் சென்னை விமான நிலையத்தைப் பயன்படுத்துகிறார்கள். அடுத்த சில ஆண்டுகளில் இது 3 கோடிக்கு மேல் அதிகரிக்கும் எனவும், அடுத்த 10 ஆண்டுகளில் 8 கோடி பயனாளிகள் சென்னை விமான நிலையத்தைப் பயன்படுத்துவார்கள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2000-ஆம் ஆண்டிலேயே தகவல் தொழில்நுட்பப் பூங்கா (டைடல் பார்க்) போன்றவை எதிர்கால நோக்குடன் அமைக்கப்பட்டதால்தான் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு அபரிதமாக வளர்ந்துள்ளது. அதுபோலத்தான் பரந்தூர் விமான நிலையமும். எதிர்காலப் பொருளாதாரப் புரட்சிக்கு அடித்தளமாக அமையும் என கணிக்கப்பட்டுள்ளது. பரந்தூர் விமான நிலையம் பயணிகளின் வசதி என்பதைக் கடந்து, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாய்த் தேவைப்படுகிறது.

திராவிட மாடல் அரசு எப்போதும் மக்களின் நலன்களை முன்வைத்தே திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வெற்றிகண்டு மக்களின் பாராட்டுகளைப் பெற்று வருகிறது என்பது நாடே நன்கு அறிந்த ஒன்றாகும். இந்நிலையில் பரந்தூர் விமான நிலையம் அமைப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களில் யார் வேண்டுமானாலும் பரந்தூர் மக்களைச் சென்று சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் பட்சத்தில் நிச்சயம் தமிழ்நாடு அரசு மக்களின் குறைகளைப் பரிவுடன் ஆராய்ந்து மக்கள் நலனைப் பாதுகாக்கும்.

பரந்தூர் பகுதியின் நீர்நிலைகளையும் எந்த அளவிற்கு சீர்செய்ய முடியும் என்பதை ஆராய உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகளையும் அரசு கவனத்தில் கொள்ளும்.

பரந்தூர் விமான நிலையம் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதியாகத் தேவைப்படும் ஒன்றாக இருக்கும் காரணத்தினால் மக்கள் பாதிக்காத வகையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. வளர்ச்சி ஒருபுறம் என்றால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்பதிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்படுகிறார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி ஏரலில் தீயணைப்பு நிலையத்தினை மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ். ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம், இளைஞர் அணி அமைப்பாளர் ஜெகன், ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கோட்டாளம், ஏரல் பேரூர் கழக செயலாளர் ராயப்பன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஜான்பாண்டியன், மாவட்ட அயலக அணி தலைவர் அனஸ், ஒன்றிய அவைத் தலைவர் மாரியப்பன், துணைச் செயலாளர் ராமசுப்பிரமணியன், ஏரல் பேரூராட்சி கவுன்சிலர் முத்துமாரி, முன்னாள் மாவட்டப் பிரதிநிதி செந்தில் ஆறுமுகம், ஏரல் வார்டு செயலாளர்கள் கந்தராஜ், ஜெயபாண்டியன், முருகன், ஸ்ரீவைகுண்டம் போலீஸ் டி.எஸ்.பி. ராமகிருஷ்ணன், ஏரல் இன்ஸ்பெக்டர் விஜயலட்சுமி உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி கடந்த 08.01.2025 அன்று இரு சக்கர வாகனத்தில் சென்ற போது எதிர்பாராதமாக நடைபெற்ற விபத்தில் பலத்த காயம் அடைந்து வண்ணார்பேட்டை காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பெற்று வரும் அவரை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 21 ம்தேதி அன்று நேரில் சென்று பார்த்து நலம் விசாரித்தார்.உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், ஒன்றியச் செயலாளர் அருள் மணி,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவஜயப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் நவநீதன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.